**குண்டசாலை பிரதேச சபை**

**கண்டி மாவட்டம்**

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 28 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 30 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜனவரி 16 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான குண்டசாலை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

-----------------------------------------

கணக்குகள் தயாரிக்கும் போது கடைபிடிக்கப்பட்டிருந்த கணக்கிட்டுக் கொள்கைகள் கணக்குகளில் வெளிப்படுத்திப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---------------------------------------

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான 228 கட்டடங்களின் பெறுமதியினை இணங்கண்டு கணக்கீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நூலகப் புத்தகங்கள் கொல்வனவு செய்யும் போது ரூபா 45,288 கிடைத்த கழிவினை கணக்கீடு செய்திருக்கவில்லை. அத்துடன் அதே தொகையினால் நுலகப் புத்தகங்களின் பொறுமதியும் குறைவாகக் காட்டப்பட்டுள்ளன.

(இ) மீளாய்வாண்டின் போது சபையினால் ரூபா 5,840,000 தொகையொன்று செலவிடப்பட்டு நிர்மானிக்கப்பட்டிருந்த மற்றும் அபிவிருத்தி செய்திருந்த 08 நிர்மான வேலைகளின் பெறுமதியின்மை மூலதனப் படுத்தியிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது நேர் செலவு வைத்தல் எனக் கிடைத்திருந்த நிலையான வைப்புக்கான வட்டி ரூபா 263,219 தொகையொன்று ஆண்டிற்கான வருமானம் என கணக்கீடு செய்யப்படாமல் கிடைக்க வேண்டிய வட்டி என கணக்குகளில் காட்டப்பட்டிருந்தன.

(உ) மீளாய்வாண்டின் போது ரூபா 118,600 தொகைக்கு கொள்வனவு செய்திருந்த 12 டோனர்களை, பொறிகள் மற்றும் பொறித் தொகுதிக் கணக்கில் வரவு வைத்து, மூலதனப்படுத்தியிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் போது கொல்வனவு செய்திருந்த ரூபா 13,990 தொகை பொறுமதியான ஸம்ஸூன் கமரா, பொறியும் பொறித் தொகுதியும் கண்ககில் இரண்டு முறை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் போது கொல்வனவு செய்திருந்த 03 மோட்டார் சைக்கில்களுக்காக, இலவசமாக வழங்கப்பட்டும் 03 தலைக்கவசங்கள் (Helmet) மற்றும் 03 போர்வைகள் என்பவற்றின் பொறுமதியினை மதிப்பீடு செய்து, கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்போது சபைக்கு கிடைத்திருந்த ரூபா 275,000 பொறுதியான மருந்து வகைகளில் வருடத்திற்கு உரிய செலவு மற்றும் இறுதி இறுப்பினை கணித்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஐ) மீளாய்வாண்டின் போது கொல்வனவு செய்திருந்த 75 அலுவலக அடையாய அட்டைகள் தொடர்பாக செலுத்தப்பட்டட ரூபா 24,750 பெறுமதியினை தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கணக்கில் கணக்கீடு செய்து மூலதனப் படுத்தியிருந்தது.

(ஒ) மீளாய்வாண்டின் போது கொல்வனவு செய்திருந்த ரூபா 154,485 பெறுமதியான மதிப்பீட்டுக் காட்கள், காகிதாகிகள் செலவு என கணக்கீடு செய்வதற்கு பதிலாக தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் என மூலதனப் படுத்தியிருந்தது.

(ஓ) மீளாய்வாண்டின் போது இடை இடையே கொல்வனவு செய்திருந்த கணக்கு இயந்திரம், ஒலி வாங்கி, ஒலி வாங்கிச் சட்டம், மின் கேத்தல், அலுவலகப் பைகல், மின்விசிறி, சுவர் கடிகாரம், புகைப்படக்கருவி ஆகிய பொருட்கள் மற்றும் உபகரணங்கள் முறையான வகைப்படுத்தல் அடிப்படை இன்றி கணக்கீடு செய்திருந்தது.

(ஔ) மீளாய்வாண்டின் திகதியில் உள்ளவாறு செலுத்தப்பட வேண்டிய கணக்காய்வுக் கட்டணத்திற்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை.

(க) மீளாய்வாண்டு டிசம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்பட வேண்டியிருந்த நீர் மின்சாரம் மற்றும் தொலைபேசிக் கட்டனம் ரூபா 112,587 இற்கான அட்டுறு செலவு என் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ங) மீளாய்வாண்டிற்கான வீதவரி மிகைக் கட்டணம் மற்றம் தாமதத் தண்டப்பணம் ரூபா 805,217 தொகையொன்று தண்டங்கள் மற்றும் எழுத்தானை கட்டனத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும் எனினும், வீதவரியின் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஞ) நகர அபிவிருத்தி அதிகார சபை தொடர்பாக சேமிப்புக் கணக்கில் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 1,620,472 எனினும், பேரேட்டு கணக்குகளில் அவை ரூபா 1,526,156 எனக் காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 94,316 தொகையொன்று குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(ட) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்தப்படவேண்டிய ஓய்வூதிய , பங்களிப்பு தொகை மீதி ரூபா 481,336 எனினும் கணக்குகளில் அவை ரூபா 448,374 என ரூபா 32,962 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ண) சபையினால் கலஞ்சிய முற்பணக் கணக்கு முறைமை ஒன்று கடைபிடிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

--------------------------------------------------------------------------------

02 கணக்கு விடயங்கள் தொடர்பாக கட்டுப்பாட்டு கணக்குகளில் பிரகாரம், மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 36,880,572 ஆக காணப்பட்டதுடன், பட்டோலையின் பிரகாரம், அக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 15,589,700 ஆக காணப்பட்டமையால், ரூபா 21,290,872 இற்கான இணக்கமின்மைகள் வெளிப்படுத்தப்பட்டன.

1.3.4 தொங்கல் கணக்குகள்

----------------------------------

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தொங்கல் கணக்கில் ரூபா 15,383 இற்கான செலவு மீதியொன்று காணப்பட்டதுடன் அந்த மீதியை கண்டுபிடித்து தீர்ப்பதற்காக நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

------------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டமையால், நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 04 கணக்கு விடயங்கள் தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 39,669,841 இற்கான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமான பரிசேதனை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

2 நிதி மீளாய்வு

---------------------

2.1 நிதி விளைவுகள்

--------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 49,292,516 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 49,012,492 ஆக காணப்பட்டமையால், நிதி விளைவுகளில் ரூபா 280,024 இற்கான முன்னேற்றமொன்று காணப்பட்டது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான சம்பள மீளளிப்பு தொகையாக ரூபா 20,465,294 தொகையொன்று கிடைத்திருந்த போதும், சம்பளம் மற்றும் படியாக ரூபா 33,233,073 தொகையொன்று செலுத்தப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் சபையின் வருமானத்தில் ரூபா 12,767,779

தொகையொன்று சபை ஊழியர்களின் சம்பள செலுத்துவதற்கு பயன்படுத்தப்படுகின்றது என அவதானிக்கப்பட்டதுடன் அப்பணம் சம்பள மீளளிப்பு தவிர சபையின் மீண்டுவரும் வருமானத்தி நூற்றுக்கு 16 ஆக காணப்பட்டது.

2.3 வருமான நிருவாகம்

------------------------------

2.3.1 வருமான சேகரித்தல் செயலாற்றுகை

--------------------------------------------------------

மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

------------------------------------------------------------------------------------------------------------------------

தலைவரினால் மீளாய்வாண்டு தொடர்பாக சமர்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான விடயம் | மதிப்பீட்டு | உள்ளவாறான | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா<br>000 | ரூபா<br>000 | ரூபா<br>000 |
| (i) | வீதவரி | 23,278 | 9,479 | 6,173 |
| (ii) | வாடகை | 9,353 | 9,320 | 848 |
| (iii) | அனுமதிப் பத்திர கட்டணம் | 5,801 | 5,511 | -- |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 38,365 | 43,792 | 14,171 |

2.3.2 வீதவரி

----------

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் ரூபா 8,400,379 இற்கான நிலுவை ஒன்று காணப்பட்டதுடன், ஆண்டின் போது பில் போடப்பட்டவைகளில் அறவீடுகளின் ரூபா 4,562,379 ஆக காணப்பட்டமையால், வருடத்திற்கான அறவீடுகளின் சதவீதம் நூற்றுக்கு 62.76 ஆக காணப்பட்டது. 2013 திசெம்பா் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடவேண்டிய ரூபா 6,173,360 இற்கான மீதி தொடர்பாக 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின பிரிவுகள் 158(1) மற்றும் 159(1) இன் பிரகாரம் ஏற்பாடுகன் கடைபிடிக்கப்பட்டு 2014 மே 31 திகதி வரை நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்காக நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

2.3.3 கழிவுப் பொருள் வரி

-------------------------------

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் ரூபா 1,022,397 இற்கான நிலுவை ஒன்று காணப்பட்டதுடன், வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை ரூபா 912,687 ஆகும். நிலுவையில் இருந்து அறவிடப்பட்டவை நுற்றுக்கு 35 ஆகிய பலவீன மட்டத்தில் காணப்பட்டதுடன், அப்பணத்தை அறவீடு செய்வதற்காக முறையான செயற்பாடு ஒன்றினை அமுல் நடததியிருக்கவில்லை.

2.3.4 கடைவாடகை

--------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பிரதேச சபைக்கு சொந்தமான கடைகளை வாடகைக்கு பெற்றிருந்த வாடகையாளர்களினால் வாடகை உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தவணை பணத்தை செலுத்த தவறிய காரணத்தினால் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 991,830 தொகையொன்று நிலுவையாக காணப்பட்டது.

(ஆ) திகன இலக்கம் 01 மற்றும் 02 கொண்ட மாட்டிறைச்சிக் கடைகள் தொடர்பாக 2008 மற்றும் 2009 ஆண்டுகளின் போது நிலுவை வாடகையாக ரூபா 1,300,188 தொகை ஒன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

2.3.5 முச்சக்கர வண்டி தரிப்பிடத்திற்கான அனுமதிப்பத்திரம்

--------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முச்சக்கர வண்டிகளுக்காக ஓர் ஆண்டிற்காக ரூபா 600 இற்காள கட்டணம் ஒன்றின் மீது அனுமதிப் பத்திர் வழங்குதல் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 1,861,151 இற்கான நிலுவை மீதி ஒன்று காணப்பட்டதுடன், அந்த நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக முறையான செயற்பாடு ஒன்று கடைபிடித்திருக்கவில்லை.

(ஆ) முச்சக்கர வண்டிகளில் இருந்து அனுமதிப் பத்திரம் கட்டணம் அறவிட்டிருந்த சந்தர்ப்பங்களில் அந்த முச்சக்கர வண்டிகளுக்காக முறையான அனுமதிப்பத்திரம் வழங்கியிருக்காத சந்தர்ப்பங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(இ) முச்சக்கர வண்டிகளுக்காக அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதன் மூலம் சபைக்குத் தேவையான வருமானத்தை உழைத்தல் வருமான பரிசோதகர்களின் பொறுப்பொன்றாக காட்டப்பட்டிருந்த போதும் சில தரிப்பிடங்களுக்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்படாமல் காணப்பட்டதுடன், வருமான் சேகரித்தலும் பலவீன நிலைமையில் காணப்பட்டது.

2.3.6 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

-------------------------------------------------------------------------------------------

மாகாண சபையிர் பிரதான செயாளரிடம் மற்றும் ஏனைய அலுவர்களிடம் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி மன்றத் தண்டப்பணம் ரூபா 226,752 தொகையொன்று மற்றும் முத்திரைக் கட்டனம் ரூபா 13,096,013 தொகையொன்று கிடைக்கவேண்டியிருந்தது.

2.3.7 தொலைபேசி செலுத்துகை டவர்களின் கட்டணம்

------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்பு மேற் கொள்ளப்படுகின்றன.

(அ) பிரதேச சபை அதிகார பிரதேசத்திர் மேற்கொள்ளப்பட்டிருந்த தெரிவு பௌதிக பரிசேதனையின் போது 22 தொலைபேசி செலுத்துகை டவர்கள் அங்காரமின்றி நிர்மானிக்கப்பட்டிருந்து. அத்துடன் பிரதேச சபையின் எதுவித பின் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இலங்கை குடியரசின் 2009 ஏப்ரல் 17

திகதி இலக்கம் 1597/ 8 கொண்ட அதிவிஷேட வா்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் தொலைபேசி செலுத்துகை டவா்களின் உயரம் 5-20வெரை ரூபா 20,000 வும் மற்றும் அதனை மிகைக்கும் ஒவ்வொரு மீற்றர்களுக்கும் ரூபா 100 வீதமும் குறிப்பிடப்பட்ட நிறுவனத்தில் இருந்து கட்டணம் அறவிடவேண்டும் எனினும் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பொருத்தப்பட்டிருந்த 22 அங்கிகாரமில்லாத செலுத்துகை டவர்களுக்கான கட்டணம் அறவிடப்படாமையால் ரூபா 440,000 இனை விட கூடியதொகையொன்று சபை இழந்துள்ளது.

(ஆ) வெளிக்கள அலுவா்கள் தமது அதிகாரப் பிரதேசத்தில் நிர்மானிக்கப்பட்டிருந்நத செலுத்துகை டவர்கள் தொடர்பாக சபைக்கு அறிவித்து, அதன் பிரகாரம் முறையான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. அத்துடன், இது தொடர்பாக மேற்குறிப்பிட்ட வா்த்தமானியில் அறிவித்தலின் பட்டோலை V இல் குறிப்பிட்டுள்ளவாறு அங்கிகாரமற்ற டவர்களை சட்டரீதியாகும் போது அனைத்து 05 மீற்றர் உயரத்திற்கும் ரூபா 10,000 வீதம் கட்டனம் அறவீட செய்வதற்கு இயலுமை தொடர்பாகவும் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(இ) செலுத்துகை டவர்கள் நிர்மானிக்கப்பட்டிருந்த அனைதது காணிகளினதும் கட்டடங்களினதும் வருடாந்த பெறுமதி மதிப்பீடு அதிகரிக்கப்பட வேண்டும். அத்துடன், அதற்கு நேரொப்ப குறிப்பிட்ட வீதவரியினை அதிகரிப்பதற்காக பொறுப்புவாய்ந்த அலுவலா்கள் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) மத்திய மாகாணத்தின் அனைத்து உள்ளுராட்சி நிறுவனங்களின் தலைவா்களுக்கும் அறிவித்திருந்த உள்ளூராட்சி ஆணையாயளரின் 2014 ஜுன் 18 திகதி இலக்கம் 2014/4 கொண்ட சுற்று நிருபத்தின் பிரகாரம் வருமானம் சேகரிப்பதற்கான சட்டரீதியான பொறுப்பு சபை செயலாளா், வருமாண பரிசோதகர், வருமான நிருவாகி மற்றும் விடயத்திற்கு பொறுப்பான அலுவலா் ஆகியோர் கட்டுப்பட்டுள்ளனர் என சுட்டிக்காட்டியிருந்த போதும் 09 தொலைபேசி செலுத்துகை டவர்கள் தொடர்பாக டவா்களின் மூலம் வசதிகள் வழங்கும் நிறுவனங்களை இணங்கண்டு 2013 ஆண்டு வரை வாத்தக வரி அறவீடு செய்வதற்காக நடவடிக்கைகள் எடுத்திருக்வில்லை.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

---------------------------------------------

பினவரும் வியங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்கு சொந்தமாக விளையாட்டு மைதானஙகள் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போது அறவிடப்படும் கட்டனங்கள் பதிவு செய்வதற்காக பதிவேடு ஒன்று பேனப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான ரூபா 207,340,000 பெறுமதியான 31 மையவாடிகள் மற்றும் பெறுமதி குறிப்பிடப்படாத 323 காணித்துண்டுகளின் பெறுமதியினை மதிப்பீடு செய்து, கணக்கீடு செய்திருக்கவில்லை.

### 3.2 தொழிற்பாட்டு மூலதன முகாமைத்துவம்

-------------------------------------------------------------

மொத்த நடைமுறை சொத்துகளுடன் நடைமுறை பொறுப்புக்களை காட்டும் விகிதாரம் 1:1.43 ஆக காணப்பட்டதுடன், முன்னைய ஆண்டின் விகிதமாக 1:1.25 உச்ச மட்டத்தில்

காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டமையால், ஒட்டுமொத்த நடைமுறை சொத்துக்களில் நூற்றுக்கு 28 எனப்படும் ரூபா 25.3 மில்லியன் நிர்மாண வேலை கடன்பட்டோர் காணப்பட்டது அத்துடன் மொத்த நடைமுறை பொறுப்புக்களில் நுற்றுக்கு 59 எனப்படும் ரூபா 76.8 மில்லியன் இற்கான பிணை மற்றும் பலவின வைப்புக்கள் அடங்கியிருந்தது.

3.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள்

---------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 561,000 இற்கான பெறுமதியான 03 வகையான சொத்துக்கள் 01 வருடத்திற்கு மிகையான காலப்பகுதி முதல் செயற்படுத்தப்பட்டவை மற்றும் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது.

3.4 ஒப்பந்த நிருவாகம்

---------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிர்மான வேலைக்காக அறிவித்தல் பலகைகள் பொறுத்துவதற்காக ஒரு பாதைக்காக ரூபா 6,000 வீதம் 05 பாதைகளுக்காக ரூபா 30,000 செலுத்தப்பட்டிருந்த போதும், குறிப்பிட்ட பாதைகளில் குறிப்பிட்ட அறிவித்தல் பலகைகள் பொருத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இணைத் தொடர் கொங்கிரீட் கற்கள் பதிவு செய்யப்பட்டு வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த பின்தாலி சந்தி கல்மடுவ பாதையில் 618 அடிகளுக்காக கொடுப்பனவு மேற்கொண்டிருந்த போதும், பௌதிக பரிசோதனையின் போது பாதையின் நீளம் 615 அடிகள் என வெளிப்படுத்கப்பட்டதுடன் பாதையின் இறுதிப் பகுதியில் 36 அடிகள் அளவில் 04 சந்தர்பங்களில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின்போது 06'' அங்குல கனத்தில் நிர்மாணிக்கப்பட வேண்டியிருந்த பாதுகாப்பு சிறுமதிலின் கொங்கிரீட் கனம் 4'', 6'' 3 ½'' அளவுகளில் காணப்பட்டது.

4 கணக்கு நடவடிக்கை தன்மையும் நல்லாட்சியும்

---------------------------------------------------------------------

4.1 கூட்டிணைப்புத் திட்டம்

---------------------------------

மிளாய்வாண்டின் போது சபையினால் கூட்டினைப்புத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

4.2 கொள்வனவுத் திட்டம்

-------------------------------

ரூபா 88,985,611 இற்கான மூலதன செலவுகளை சபை மேற் கொண்டிருந்த போதும், மீளாய்வாண்டிற்காக கொள்வனவு திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை.

4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

----------------------------------------------------------------

சபையினால் மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமைத்திருக்கவில்லை.

4.4 அகக் கணக்காய்வு

-----------------------------

மீளாய்வாண்டின் போது சபையினால் போதியளவு அகக் கணக்காய்வு ஒன்று மேற் கொண்டிருக்கவில்லை.

4.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

----------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம், மதிப்பீட்டு வருமானம் மற்றும் செலவுகள், உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகளுடன் ஒப்பீடு செய்யும் போது, 06 வருமான விடயங்களில் நூற்றுக்கு 74 முதல் நூற்றுக்கு 186 வரையும், மற்றும் 08 செலவு விடயங்களில் 672 முதல் நூற்றுக்கு 12 வரையும் முரண் ஒன்று அவதானிக்கப்பட்டதுடன் பாதீடு பலன்தரு கட்டுப்பட்டு கருவி ஒன்றாகப் பயன்படுத்தப்படவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) 03 வருமான தலைப்புக்களை சேர்ந்த 10 உப விடயங்களுக்காக பாதிடு செய்யப்பட்ட ரூபா 35,602,594 இற்கான வருமானம் அறவீடுகளின் சதவீதம் நூற்றிக்கு 29 ஆகும்.

(இ) 05 வருமான தலைப்புக்களில், 04 உப விடயங்களுக்காக பாதீடு செய்யப்பட்டிருந்த, ரூபா 150,000 இற்கான வருமானத்தை உழைப்பதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

5 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) அகக் கணக்காய்வு

(இ) வருமான நிருவாகம்